**செய்தி வெளியீடு எண்:488** **நாள்:19.10.2016**

**செய்தி வெளியீடு**

**கூட்டுறவு வீட்டுவசதித் துறை**

**முக்கிய அறிவிப்பு**

தமிழ்நாட்டில் பன்மாநில (Multi-state) கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உருவாக்கப்பட்டு மனைத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகிறது. இச்சங்கங்களில் மனைகள் விற்பனை செய்வதற்கு முத்திரைத்தீர்வு விலக்கு உள்ளது என்றும் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த பன்மாநில கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் எதுவும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் சட்டம் 1983 (தமிழ்நாடு சட்டம் எண். 30 / 1983 ) ன் கீழ் பதிவு செய்யப்படவில்லை. எனவே பன்மாநில கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் வழங்கப்படும் முத்திரைத் தீர்வை விலக்கு, , பணியாளர்கள் ஆட்சேர்ப்பு மற்றும் வைப்புத் தொகைகள் திரட்டுதல் ஆகியவை குறித்தான விளம்பரங்களுக்கும், தமிழ்நாடு அரசு வீட்டுவசதித் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. தமிழ்நாட்டில் இயங்கும் பன்மாநில கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் எதுவும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதிரியான தவறான விளம்பரங்கள் மூலம் உட்படுத்தப்படும் நடவடிக்கைகளுக்கு, தமிழ்நாடு அரசு கூட்டுறவு வீட்டுவசதித் துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி)

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**